எண். பதிவாளர்/திட்டம்/சுற்றறிக்கை/2018/ 21

புதுச்சேரி அரசு
கூட்டுறவுத்துறை, வி.வி.பி நகர்,
தட்டாஞ்சாவடி, புதுச்சேரி- 605 009.

*** *** **

புதுச்சேரி நாள் : 20/1/22

## சுற்றறிக்கை

**பொருள் :** கொரோனா வைரஸ் தொற்று —— கட்டுப்படுத்துதல் - முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் - சம்மந்தமாக.

*** *** ***

"கொரோனா வைரஸ்" (Corana Virus) தொற்று பரவாமல் இருக்கவும் மற்றும் கட்டுப்படுத்தவும் அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதுகாப்பு முன்னேற்பாடுகளின் தொடர் நடவடிக்கையாகவும், கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களின் நலன் கருதியும் கீழ்க்கண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த அறிவுறுத்தப்படுகிறது.

1) சங்க வாயிலில், கிருமி நாசினி பொருட்கள் மற்றும் தண்ணீர் வைக்கப்படவேண்டும். அவற்றை உபயோகப்படுத்திய பிறகு உறுப்பினர்கள்/ ஊழியர்கள் / பொதுமக்கள் சங்க அலுவலகத்தின் உள்ளே வர ஆவண செய்யவேண்டும்.

2) சங்கத்தின் உள்ளே, சங்க ஊழியர்கள் மற்றும் சங்க உறுப்பினர்கள் முககவசம் அணிந்து, உரிய சமூக இடைவெளி விட்டு இருக்க ஆவண செய்யவேண்டும்.

3) சங்க செயல்பாட்டில் பங்கு பெறும் உறுப்பினர்கள் / ஊழியர்கள் எவருக்கேனும் கொரோனா அறிகுறி தெரிய வந்தால் சங்க அலுவலகம் மற்றும் உபயோகப்படுத்தும் பொருட்களை கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்யப்படவேண்டும்.

4) மத்திய மற்றும் மாநில அரசுகளின் அறிவுறுத்தல்களை கட்டாயம் முழுமையாக பின்பற்றவேண்டும்.

5) அத்தியாவசிய தேவைகள் நிறைவேற்றி வரும் சங்கங்கள் மற்றும் கொரோனா பரவலை கட்டுப்படுத்துவதற்கு தேவையான பணியாளர்கள் ஆகியோருக்கு இந்த பணியாளர்கள் வருகை குறித்த ஆணை பொருந்தாது.

6) பிற சங்கங்களில், சங்க உறுப்பினர்களின் சேவையை பூர்த்தி செய்வதற்கு தேவையை கருத்தில் கொண்டு, சங்க நிர்வாகம் ஊழியர்களின் எண்ணிக்கையில் 50% மிகாமல் சுழற்சி முறையில் சங்க பணியாளர்களின் வருகையை நெறிமுறைப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

7) எனினும், சங்கத்தின் செயல்பாடுகளை கருத்தில் கொண்டு அதிக அளவு பணியாளர்கள் வருகையை, சங்க நிர்வாகம் உயர்த்திக்கொள்ளலாம்.

(L. முஹமது மன்சூர்)
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்

11/12

**பெறுநர் :**

அனைத்து கூட்டுறவு சங்கங்கள்.

**நகல் பெறுவோர் :**

1. கூட்டுறவுச் செயலரின் தனிச்செயலர்.
2. இயக்குநர், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, புதுச்சேரி.
3. பால் அபிவிருத்தி அதிகாரி,
4. துணைப்பதிவாளர் (வீட்டுவசதி)
5. துணைப்பதிவாளர் (கடன்)
6. துணைப்பதிவாளர் (நுகர்வோர்)
7. துணைப்பதிவாளர் (கைத்தறி)
8. துணைப்பதிவாளர், காரைக்கால்
9. துணைப்பதிவாளர், மாஹே.
10. கூட்டுறவு அதிகாரி, ஏனாம்.

(3–10:) தங்கள் கட்டுப்பாட்டில் வரும் சங்கங்களுக்கு இச்சுற்றறிக்கையின் நகலை அனுப்பி வைக்கவும்.

11. Web Editor.